# அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது தேசியத்தர மதிப்பீட்டில் **'A+'** தகுதி (நான்காவது சுற்றில் 4 க்கு 3.48 புள்ளிகள்), பல்கலைக்கழக மானியக்குழு வழங்கிய திறன்மிகு கல்லூரி, புதுதில்லி இந்திய அரசு உயிரித் தொழில்நுட்பத் துறையின் நட்சத்திரத் தகுதி, தேசியத் தரவரிசைப் பட்டியலில் (**NIRF 2022) 83** ஆவது இடம் மற்றும் **ISO 9001:2015** சான்றிதழ் பெற்ற நிறுவனம்)

சிவகாசி – 626 124

# விடுதி விதிகள்

## (ஆண்கள் விடுதி)

# அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது தேசியத்தர மதிப்பீட்டில் **'A+'** தகுதி (நான்காவது சுற்றில் 4 க்கு 3.48 புள்ளிகள்), பல்கலைக்கழக மானியக்குழு வழங்கிய திறன்மிகு கல்லூரி, புதுதில்லி இந்திய அரசு உயிரித் தொழில்நுட்பத் துறையின் நட்சத்திரத் தகுதி, தேசியத் தரவரிசைப் பட்டியலில் **(NIRF 2022) 83** ஆவது இடம் மற்றும் **ISO 9001:2015** சான்றிதழ் பெற்ற நிறுவனம்)

## சிவகாசி – 626 124

**விடுதி விதிகள்**

- விடுதியானது அதன் காவலராகிய முதல்வரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. உதவிக் காவலா்களின் ஒத்துழைப்புடன் துணைக்காவலா், காவலருக்கு அவருடைய பணியில் துணைபுரிவாா்.

**விடுதி கட்டணம்**

- ஒவ்வொரு மாணவரும் விடுதியில் சேரும் போது கீழ்க்கண்ட கட்டணங்களை இணைய வழியில் செலுத்த வேண்டும்.

| | |
|---|---|
| நுழைவுக் கட்டணம் | ரூ. 50/- |
| காப்புத் தொகை | ரூ. 5500/- |
| முதற் பருவ வசதி மற்றும் நிர்வாகக் கட்டணம் | ரூ. 5000/- |

காப்புத் தொகையானது கல்வியாண்டின் இறுதி இரண்டு மாதத்திற்குரிய உணவுத் தொகை கழிக்கப்பட்டு எஞ்சியதொகை இருப்பின் மறு ஆண்டு ஜூன் மாதத்தில் மாணவா்களின் பெற்றோா் அல்லது பாதுகாவலரிடம் திருப்பித் தரப்படும். வேறு எந்த சூழ்நிலையிலும் காப்புத் தொகைப் பணம் திருப்பித் தரப்பட மாட்டாது. கல்வியாண்டில் இரண்டாம் பருவத்திற்குரிய வசதி மற்றும் நிர்வாகக் கட்டணம் ரூ.5000 டிசம்பா் மாதம் 16ம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

- விடுதியில் சோ்ந்த பிறகு துணைக் காவலரிடம் எழுத்து மூலமாக இசைவைப் பெற்றாலன்றி எந்த மாணவரும் விடுதி உறுப்பினா் என்ற நிலையிலிருந்து நீங்க முடியாது. இல்லாவிடில் இசைவு பெறாமல் நின்று கொண்ட காலத்திற்குரிய உணவுத் தொகையையும், பிற கட்டணங்களையும் அவா் செலுத்த வேண்டும். விடுதியில் சோ்ந்த பிறகு பெற்றோா் அல்லது காப்பாளா் சரியான காரணங்கள் காட்டினாலன்றி மாணவா்கள் விடுதியிலிருந்து விலகிச் செல்லப் பொதுவாக இசைவு தரப்படமாட்டாது.

- சிலநேரங்களில் பெற்றோா் கேட்காத போதும் கூட மாணவா் விடுதியிலிருந்து விலகிச் செல்ல இசைவு தரும் உரிமையைத் துணைகாவலா் பெற்றுள்ளாா். ஒரு பருவம் முடியும் முன் விடுதியை விட்டு விலக ஒரு மாணவருக்கு இசைவு தரப்பட்டாலும் வசதி மற்றும் நிர்வாகக் கட்டணம் ஒரு பருவத்திற்குரிய தொகையினை முழுமையாகக் கட்ட வேண்டும். பகுதிக் கட்டணம் கட்டுதல் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

**உணவுத் தொகைக் கட்டணம் செலுத்தும் முறை**

- **ஒவ்வொரு மாதமும் 5ம் தேதி உணவுக் கட்டணத் தொகை பெற்றோரின் தொலைபேசிக்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அனுப்பப்படும் பெற்றோர் / காப்பாளர் தங்களது தொலைபேசி எண்களை மாற்றினால் உடனடியாக விடுதிக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.**

- உறுப்பினர்கள் கட்ட வேண்டிய மாதக் கட்டணம் அறிவிப்பு பலகையில் நடப்புமாதத்திற்கு அடுத்த மாதம் 10 ஆம் நாளில் வெளியிடப்படும். **அம்மாதத்தின் 25 ஆம் தேதிக்குள் தொகை செலுத்தப்பட வேண்டும்.** இல்லை எனில் அத்தேதிக்குப் பிறகு ஒரு நாளுக்கு பத்து ரூபாய் வீதம் அபராதம் செலுத்த வேண்டியது வரும். அம்மாதத்தின் 25 ஆம் தேதியோ அல்லது அதற்கு முன்போ தொகை செலுத்தப்படாவிட்டால், கட்டணம் கட்டத் தவறியவர் அடுத்த மாதம் 1 ம் தேதி விடுதியை விட்டு தற்காலிகமாக விலக்கப்படுவார். உணவுத் தொகையில் விடுமுறை காலத்தில் தரப்படும் கழிவு பற்றிய விதி தற்காலிகமாக விலக்கி வைக்கப்படும் உறுப்பினருக்கு பொருந்தாது.

**உணவுத் தொகைக் கழிவு**

- விடுதியை விட்டு விடுமுறை பெற்றுச் சென்ற ஒரு மாணவருக்கு முதல் 5 நாட்களுக்கு உணவு தொகையில் கழிவு இல்லை. அதற்கு மேலும் விடுமுறை இருப்பின் 5 நாட்கள் போக எஞ்சியகாலத்திற்கு முழுக் கழிவு உண்டு. துணைகாவலரிடம் விடுமுறை பெற்று விடுதியில் தங்காதகாலம் மட்டுமே உணவு தொகைக் கழிவிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

- கல்லூரி முதல்வரின் அனுமதியுடன் கல்லூரியைச் சார்ந்த துறைகள் அல்லது மன்றங்கள் ஏற்பாடு செய்யும் கல்விச் சுற்றுலா (Study Tour) செல்வதன் காரணமாக விடுதி மாணவர்களுக்கு விடுதியில் உணவு கட்டணத்தில் கீழ்க்கண்ட அடிப்படையில் கழிவு அனுமதிக்கப்படும்.

- விடுதியில் உணவு உண்ணாத காலத்தின் முதல் 2 முழு நாட்களுக்கு எந்தவிதமான கழிவும் இல்லை. அதன் பின்னுள்ள முழுநாட்களுக்கு முழு கழிவு உண்டு.

- விடுதி ஊழியர்கட்கு வெகுமதி தருவது தடை செய்யப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் தங்களுக்குள் பணம் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதும் கூடாது.

**விருந்தினர்கள்**

- துணைக்காவலர் அல்லது உதவிக் காவலர் ஒப்புதலுடன் தான் விடுதி உறுப்பினர்கள் விருந்தினர்களை ஏற்க முடியும். அந்த ஒப்புதலும் இயல்பாக அன்றி இன்றியமையாத சூழ்நிலையிலேயே வழங்கப்படும். எந்த விருந்தினரும் விடுதியில் ஒரு இரவுக்கு மேல் தங்குவதற்கு அனுமதி தரப்படமாட்டாது. படிப்பு நேரங்களில் விருந்தினர் எவரையும் ஏற்கமுடியாது. மகளிர் விருந்தினராக ஏற்கப் பெறல் கூடாது.

- துணைக்காவலர் அல்லது உதவிக் காவலர் அனுமதியுடன் ஒரு உறுப்பினரால் ஏற்கப்படும் விருந்தினரை உபசரிக்கும் பொறுப்பை விடுதி ஏற்றுக்கொள்ள இயலாது.

**விடுமுறை**

- பெற்றோர் அல்லது காப்பாளரிடமிருந்து எழுத்து மூலம் வேண்டுகோள் வந்தாலன்றி ஒரு பருவத்தின் நடுவே இரண்டு அல்லது மூன்று நாள் தொடர்ந்து விடுமுறை வந்தாலும் வீடு செல்ல அனுமதி தரப்படமாட்டாது.

- விடுதித்துணைக்காவலர் அல்லது உதவிக்காவலர் அனுமதியின்றி விடுதியை விட்டு செல்பவர்களுக்கு விடுதி பொறுப்பேற்க இயலாது. அவ்வாறு செல்லும் மாணவர்கள் உடனடியாக விடுதியில் தங்களது இடத்தை இழந்து விடுவர்.

- விடுதி அலுவலகத்தில் கிடைக்கும் அச்சிட்ட விண்ணப்பத்தின் மூலம் மட்டுமே துணைக்காவலரிடம் விடுமுறை பெற்றிடல் வேண்டும்.

- விடுதி மருத்துவரின் சான்றிதழின் அடிப்படையிலேயே நோய் விடுமுறை அளிக்கப்படும்.

- கல்லூரி வகுப்புகளுக்கு விடுமுறை கோரும் விண்ணப்பங்களில் துணைக்காவலரின் கையொப்பம் பெற்றிடல் வேண்டும்.

- எந்த விடுதி மாணவராவது முதல்வரிடம் விடுமுறை பெறாமல் கல்லூரி செல்லாதிருந்தால் விடுதியிலிருந்து அவர் நீக்கப்படுவார்.

**விடுதியில் படிப்பு நேரம்**

- மாணவர்கள் சரியாக இரவு 7.55 மணிக்குள்ளும், காலை 8.40 மணிக்குள்ளும் அவர் அவருக்கு உரிய அறையில் அமர்ந்திட வேண்டும்.

- படிப்பு நேரம் அடியிற் கண்டவாறு உறுதியுடன் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.
  காலை 8.45 மணி முதல் 9.30 மணி வரை
  இரவு 8.00 மணி முதல் 11.00 மணி வரை
  இரவு 11 மணிமுதல் காலை 6 மணிவரை முழு அமைதி நேரமாகக் கடைப்பிடிக்க வேண்டும். காலை 6 மணிக்குப் பின் மாணவர்கள் தூங்கக் கூடாது.

  விடுமுறை தினங்களில் காலை 10 மணி முதல் 12 மணி வரை
  மதியம் 2 மணி முதல் 4 மணி வரை

- படிப்பு நேரங்களில் எந்த நேரத்திலும் வருகைப் பதிவு எடுக்கப்படலாம்.

- படிப்பு நேரங்களில் மாணவர்கள் அறையை விட்டு வெளியே வரக்கூடாது. அந்த நேரங்கள் படிப்புக்கென்று உறுதியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

**அறைகள்**

- துணைக் காவலரால் ஒதுக்கப்பட்ட அறைகளில் மட்டுமே மாணவர்கள் தங்க வேண்டும். துணைக் காவலர் ஆணையின்றி ஒருவருக்கொருவர் அறைகளை மாற்றிக் கொள்ளக் கூடாது. அதுபோலவே மேஜை நாற்காலி முதலியவற்றை ஒரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்கு மாற்றுவதும் கூடாது. அறைகளை விட்டு வெளியில் மேஜை நாற்காலிகளைக் கொண்டு வரக்கூடாது.

- **மாணவர்கள் தங்கள் அறையை சுத்தமாக வைத்திருத்தல் அவசியம்.**

- **மாணவர்கள் உதவிக் காவலரின் அனுமதியுடன் படிக்கும் நேரங்களில் மட்டும் தங்களுடைய மடிக்கணினியை (Laptop) இணையதள வசதியுடன் பயன்படுத்திக் கொள்ளலாம்.**

- **செல்போன் / டேப் (Tablet) போன்ற சாதனங்களை மாணவர்கள் வைத்திருக்க அனுமதி இல்லை.**

- **மாணவர்கள் செல்போன் பயன்படுத்தினால் விடுதியிலிருந்து உடனடியாக நீக்கப்படுவதுடன் அபராத கட்டணமாக ரூ.2500 செலுத்த வேண்டும்.**

- அறைகளில் உள்ள மேஜை நாற்காலி முதலிய அனைத்துப் பொருள்களுக்கும் மாணவர்களே பொறுப்பாவார். ஏதேனும் சேதம் ஏற்பட்டால் அதற்குரிய ஈட்டுத் தொகையை அவர்களே கட்ட வேண்டும். விடுதியை விட்டு விலகும் போது அறையிலுள்ள பொருட்களை விடுதி கணக்கரிடம் உரிய முறையில் ஒப்படைத்து அதற்கான சான்றிதழை உறுப்பினர் பெற்றிடல் வேண்டும். இல்லாவிடில் பின்னர் சரிபார்க்கப்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு அவர்களே பொறுப்பாவர்.

- சுவர்கள், சன்னல்கள், கதவுகள் முதலியவற்றில் கிறுக்குதல், படங்கள் ஒட்டுதல் அறிவிப்புக்களை இணைத்து அலங்கோலம் செய்தல் விடுதிப் பொருள்களுக்குச் சேதம் விளைவித்ததாக கருதப்படும். அவ்வகைச் செயல்களில் ஈடுபடுவோர் கடும் நடவடிக்கைக்கு உள்ளாவர். விடுதியில் எந்தப் பொருளுக்காவது சேதம் விளைவித்தால் குற்றம் செய்தவர் ஈட்டுத் தொகையைக் கட்ட வேண்டும். குறிப்பாக யார் எனத்தெரியாவிட்டால் எல்லா உறுப்பினரும் மொத்தமாகச் செலுத்த வேண்டும்.

- ஆள் இல்லாத பொழுது அல்லது அறை பூட்டப்பட்டிருக்கும் பொழுது அறைகளில் விளக்கு எரிந்தாலோ அல்லது மின்விசிறி சுற்றிக் கொண்டிருந்தாலோ அத்தகைய கவனக்குறைவு குற்றம் செய்த மாணவர் ரூ.100 அபராதம் செலுத்த வேண்டும். குறிபிட்ட இன்னார் என்று கண்டு கொள்ள முடியாத நிலையில் அறையிலுள்ள அனைத்து மாணவர்களும் பொறுப்பாக்கப்பட்டு நபர் ஒருவருக்கு ரூ.25 அபராதம் செலுத்த வேண்டும். மின்சாரத்தை வேறு வகையில் தவறாகப் பயன்படுத்துவோர் ரூ.100 அபராதம் கட்டுவதுடன் செப்பனிடும் செலவை ஏற்று வேறு ஒழுங்கு நடவடிக்கைக்கும் உள்ளாக வேண்டும்.

- அறைகளை விட்டுச் செல்லும்போது அறைகள் பூட்டியும் சன்னல்கள் மூடியும் உள்ளனவா என்று உறுப்பினர்கள் சரிபார்த்தல் வேண்டும்.

- கல்லூரியில் பெயர் நீக்கம் செய்யப்படுகிற ஒரு விடுதி மாணவர் விடுதி உறுப்பினர் என்ற உரிமையை இழந்து விடுவதால் அறையை உடனடியாகக் காலி செய்து விட வேண்டும்.

தேவையென்று கருதும் பொழுது துணைக்காவலர் எந்த அறையையும் எந்த நேரத்திலும் தானாகவோ அல்லது தன்னால் நியமிக்கப்பட்ட நபர் மூலமாகவோ சோதனையிடும் அதிகாரத்தைப் பெற்று இருக்கிறார்.

**உணவு வசதி**

- உணவு கட்டணத் தொகையானது பகிர்ந்து கொள்ளும் முறையில் அமையும்.

- சைவம் அல்லது அசைவம் என ஏதேனும் ஒரு வகை உணவுக்கு பதிவு செய்து கொண்ட மாணவர் அக்குறிப்பிட்ட பிரிவில் உறுப்பினராக ஒரு மாதம் முழுவதும் இருக்கவேண்டும். அடுத்துவரும் மாதத் தொடக்கத்திலிருந்து பிரிதொரு வகை உணவுப் பிரிவுக்குச் செல்ல விரும்பினால், துணைக்காவலரிடம் அடுத்த மாதம் தொடங்குவதற்கு மூன்று தினங்களுக்கு முன்பாக எழுதிக்கொடுத்து அவரின் ஒப்புதலின் பேரில் மாற்றிக்கொள்ளலாம்.

- மாணவர்கள் தமக்குள்ளே தேர்ந்தெடுத்த சார்பாளர்களைக் கொண்டு ஒர் உணவுக் குழு அமைக்கப்படும். துணைகாவலர் தலைமையின் கீழ் நடைபெறும் அக்குழு உணவுத் திட்டம், விருந்துகள், பந்தியில் ஒழுங்குமுறை ஆகியன பற்றிப் பொறுப்பேற்கும்.

- உணவு நேரம் பின்வருமாறு அமையும்

| | | |
|---|---|---|
| காலை | : | 7.30 முதல் 8.30 |
| நண்பகல | : | 1.00 முதல் 2.00 |
| இரவு | : | 7.00 முதல் 7.45 |

- சமையல் அறைக்குள் மாணவர்கள் நுழைதல் கூடாது.

- நோயுற்ற நேரங்களில், துணைக்காவலர் அல்லது உதவிக்காவலரின் அனுமதியின் பேரில் மாணவர்களுக்கு அறைகளில் உணவு வழங்கப்படும்.

- உணவு திட்டத்தில் அடங்காத தயிர், முட்டை, பழம், சைவ அசைவ வகைகள் போன்றவைகள் கூடுதல் இனங்கள் (Extra) என்ற பகுப்பில், கூடுதல் கட்டணத்தில் வழங்கப்படும். அவ்வகைப் பொருட்கள் விரும்புவோர் தங்கள் தேவைகளை அடுத்த மாதம் தொடங்குவதற்கு 3 தினங்களுக்கு முன்பாக துணைக் காவலரிடம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

- மேற்கண்ட இனங்கள் தவிர, விருந்தினர் சாப்பாட்டுக் கட்டணம், சிற்றுண்டிச்சாலையின் உணவுப்பண்ட விற்பனை விலைகள் அவைகளை வாங்குவதற்கான ரசீது புத்தக (Canteen Ticket Book) விலை போன்றவைகளை துணைக்காவலர் அவ்வப்போது அறிவிப்பார்.

- ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஏனைய விடுமுறை நாட்களிலும் வழக்கமாக உள்ள படிப்பு நேரங்களுடன் பின் வரும் நேரமும் படிப்பு நேரமாக அமையும். காலை 10 மணிமுதல் 12 மணிவரை பிற்பகல்2 மணிமுதல் 4 மணிவரை எனினும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஏனைய விடுமுறை நாட்களிலும் காலை 10 மணிக்கு முன் படிப்பு நேரம் கட்டாயபடுத்தப்படமாட்டாது.

- படிப்பு நேரங்களிலும், இரவு 10 மணிக்கு முன்பும் மாணவர்கள் தம் அறைக் கதவுகளைத் தாழிடக் கூடாது.

**சிறப்பு அம்சங்கள்**

- ஞாயிறு மன்ற கூட்டம்
- இலவச இணைய தள வசதி
- தட்டச்சுப் பயிற்சி (Type Writing), சுருக்கெழுத்து (Short hand)
- ஓட்டுனர் பயிற்சி (Driving Classes)
- போடடித் தேர்வுக்கான பயிற்சி (Coaching Classes)
- Photo copy & Printing
- Recreation Room with LED TV
- Sports articles

**பொது விதிகள்**

- மாணவர்கள் தங்கள் அறைகளை எப்பொழுதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். குப்பை மற்றும் கழிவுப் பொருட்களை அதற்கென கொடுக்கப்பட்டு உள்ள கூடையில் தான் போடவேண்டும்.

- விடுதி ஊழியர் பற்றி எக்காரணம் பற்றிய முறையீடும் மேல் நடவடிக்கைக்காக எழுத்து மூலம் துணைக்காவலரிடம் அளிக்கப் படவேண்டும். ஊழியர்களின் நடத்தை எவ்வளவு கடுமையாகவும் ஆத்திர மூட்டுவதாகவும் இருந்தாலும் எந்த உறுப்பினரும் சட்டத்தைத் தம் கைகளில் எடுத்துக் கொள்ளக்கூடாது.

- காவலர் அல்லது துணைக்காவலரின் முன் அனுமதியின்றி விடுதியின் உள்ளோ, வெளியிலோ உறுப்பினர்கள் சங்கம் அல்லது நிறுவனம் அமைப்பதோ அல்லது கூட்டம் ஏற்பாடு செய்வதோ அல்லது எந்த சூழ்நிலையிலும் எந்த வகை கூட்டத்திலும் கலந்துகொள்வதோ கூடாது.

- துணைக்காவலர் இசைவு இன்றி விடுதி மாணவர்கள் தங்களுக்குள் எந்த விதமான நிதியும் திரட்டக் கூடாது.

- தனது அறையில் பணத்தையோ அல்லது விலையுயர்ந்த பொருட்களையோ விட்டுச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது. பணத்தை கல்லூரியில் செயல்படும் வங்கியில் இட்டு வைக்க அறிவுறுத்தப் படுகிறார்கள். உறுப்பினர்கள் இழக்கும் பொருட்களுக்கு விடுதி நிர்வாகத்தினர் பொறுப்பேற்க இயலாது.

- புகைத்தல், போதைப் பொருட்கள் மற்றும் மது பயன்படுத்துதல், சீட்டாடுதல், அரசியல், மதம், ஜாதி போன்ற பூசலுக்குரிய தலைப்புகளை விவாதித்தல், சண்டையிடல் ஆகியன முற்றிலுமாக விடுதியில் தடைசெய்யப்பட்டுள்ளன. மேலும் மேற்கூறப்பட்ட செயல்களில் விடுதிக்கு வெளியேயும் மாணவர்கள் ஈடுபடலாகாது. இவ்விதியினை மீறுவோர் உடனடியாக விடுதியிலிருந்து விலக்கப்படுவர்.

- துணைக்காவலரின் அனுமதியின்றி விடுதி அறிவிப்பு பலகையிலோ அல்லது விடுதியின் பிற இடங்களிலோ எந்த அறிவிப்பும் செய்தல் கூடாது.

- மேற்பட்டவை அன்றி வேறு விதிகளும் அவ்வவ்போது காவலர் அல்லது துணைக் காவலரால் அறிவிக்கப்படும் போது அவை ஒழுங்காகப் பின்பற்றப்படல் வேண்டும்.

- ஒழுங்கற்ற நடத்தை, விடுதிப் பொறுப்பில் உள்ளவர்கட்கு கீழ்படியாமை, விதிகளை மீறுதல் முதலிய குற்றங்களுக்கு அபாராதமோ அல்லது விடுதியை விட்டு நீக்குதலோ வழங்கப்படலாம். விடுதி விதிகளைப் பற்றிய காவலரின் முடிவே இதில் இறுதி முடிவாகும்.

- உணவு மற்றும் தண்ணீரை வீணாக்கக்கூடாது.

- ஏந்த ஒரு சுழலிலும் சக மாணவர்களை யாரும் கேலி செய்தல் மற்றும் ராக்கிங் செய்வது போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது. விதியை மீறினால் விடுதியைவிட்டு உடனடியாக வெளியேற்றப்படுவார்கள்.

- வீட்டில் தங்கிப்படிப்போரை விட விடுதியில் வாழ்வோர் சிறந்த வழிகாட்டுதலையும் நட்புறவினையும் சமுதாய வாழ்வின் பயனையும் நுகர்கின்றனர். எனவே அவர்கள் சீரிய ஆன்மீகக் கோட்பாடுகளுக்கு உகந்த வழியில் கடவுளுக்காகவும் நாட்டுக்காகவும் என்ற நம் கல்லூரிக் குறிக்கோளை நடைமுறை வாழ்வில் நாள்தோறும் நிலை நாட்டிடல் வேண்டும்.

**முனைவர். செ. அசோக், M.P.Ed., M.Phil., D.Y.Ed., Ph.D.,**
**முதல்வர் மற்றும் விடுதிக்காப்பாளர்**

**முனைவர். அ. ஜோசப்சேவியர், M.Com., M.Phil., B.Ed., M.B.A., M.Sc. (Psy)., P.G.D.C.A.,Ph.D.,**
**துணைக் காப்பாளர்**

**Mobile No. 63815 61020**
**89031 63683**
**Hostel No. 94980 37700**
**94980 27700**